# ஈழநாதம்

EELANATHAM

மக்கள் நாளிதழ்



கணினி மையம்
TCC
கணினி விற்பனையாளரும் திருத்த சேவையாளரும்
சி-8690 யாழ். சாலை, கிளிநொச்சி.



நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை-12 | 28-11-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 283


# தனியரசு என்ற இறுதி மார்க்கத்திற்கு தமிழர்களை தள்ளிவிடும் நிலையை உருவாக்கிவிட வேண்டாம்!


## சிங்கள அரசியல் தலைமைகளுக்கு தேசியத் தலைவர் பிரபாகரன் வேண்டுகோள்


**சிங்கள இனவாத ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் எமது மக்களின் உரிமைகளை மறுத்து, சமரசத்தீர்வுகளை எதிர்த்து ஒடுக்கு முறையைத் தொடருமானால் எமது மக்களுக்கு உரித்தான சுயநிர்ணய உரிமையின் கீழ் நாம் பிரிந்து சென்று தனியரசைக் கட்டி எழுப்புவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இப்படியான இறுதி மார்க்கத்திற்குத் தமிழர்களைத் தள்ளிவிடும் புறநிலையை உருவாக்கிவிட வேண்டாமென நாம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு வேண்டுகோள் விடுக்கின்றோம் என தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் மாவீரர் நாள் உரையில் தெரிவித்துள்ளார்.**

மேலும் அவ் உரையில், தமிழர்களைப் பகடைக்காய்களாகப் பாவித்து ஆடப்படும் சதுரங்க விளையாட்டின் எதிர்விளைவாக எத்தனையோ சமரச முயற்சிகள் பாழடிக் கப்பட்டன. எத்தனையோ பேச்சுவார்த்தைகள் முறிந்துபோயின. எத்தனையோ உடன்பாடுகள் கிழித்தெறியப்பட்டன. எத்தனையோ ஒப்பந்தங்கள் செயலிழந்து செத்துப் போயின. இதனால் தமிழரின் பிரச்சினை தீர்வின்றித் தொடர்கிறது. காலத்தால் மோசமாகித் தமிழரின் அவல வாழ்க்கை தொடர்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் சிலந்தி வலைக்குட் சிக்கித் தமிழரின் வாழ்வும் வளமும் சிதைந்து போவதை நாம் இனியும் அனுமதிக்க முடியாது.

வன்முறையைத் துறந்து, மென்முறைப் பாதையைத் தழுவி சமரசத்திற்கும், சமாதான முன்னெடுப்புகளுக்கும் (IVஆம் பக்கம் பார்க்க)





தேசியத் தலைவர் அவர்கள் சுடரேற்றி மாவீரருக்கு வணக்கம் செலுத்துகிறார்.

## கடலிலே காவியமான மாவீரருக்கு முல்லைக் கடற்பரப்பில் சுடரேற்றல்

(அலுவலக செய்தியாளர்)

கடலிலே காவியமான மாவீரர்களின் நினைவாக சுடரேற்றும் நிகழ்வு நேற்று மாலை முல்லைக் கடற்பரப்பில் எழுச்சி பூர்வமாக நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து கரையில் கூடி நின்ற மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் தமது பிள்ளைகளின் நினைவைச் சுமந்து சுடர்களை ஏற்றி வைத்தனர்.

கடற்புலிகளின் தாக்குதல் படகுகளின் அணிவகுப்புடன் மாலை 4.45 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. அடுத்து பிபகல்5.30 மணிக்கு ஆழ் கடல் பகுதியில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட படகை கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை உள்ளிட்டோர் சென்றடைந்து படகின் அண்மையாக தமது படகை நிறுத்தி வைத்திருந்தனர்.

தமிழீழ தேசியத் தலைவர் அவர்களது உரை ஆரம்பமாகும்வேளை அணிவகுப்பில் இடம்பெற்ற படகுகள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. பின்னர் கடலில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி பொதுச் சுடரேற்றிய சம நேரத்தில் படகுத் தொகுதிகள் ஒவ்வொன்றாக அணி வகுத்து பொதுச் சுடரேற்றப்பட்ட கப்பலை நோக்கி வந்து கொண்டிருந்தன. இரண்டு மணி நேரத்தில் கடற்கரையில் (IVஆம் பக்கம் பார்க்க)

## கொட்டும் மழையிலும் உணர்வெழுச்சியுடன் மக்கள் பங்கேற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்!

தமிழீழத் தாயகப் பகுதியெங்கும் மாவீரர் நாள் நேற்று உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது. கொட்டும் மழையின் மத்தியிலும் பல்லாயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், பொதுமக்கள், போராளிகள் மாவீரர் துயிலுமில்லங்களுக்கு வருகை தந்து மாவீரர்களுக்கு தமது உணர்வுபூர்வ அஞ்சலி செலுத்தினர்.

மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் அணிவகுப்பு மரியாதையுடன் மாவீரர் துயிலுமில்லங்களுக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து மாலை 5.40 மணிக்கு தமிழீழத் தேசியத் தலைவருடைய உரை ஆரம்பமாகியது.உரைநிறைவுற்றதும் உடனடியாக 6.05 மணிக்கு அனைத்து வழிபாட்டிடங்களிலும் ஒரு மணித்துளி நேரம்மணி ஒலி எழுப்பப்பட்டது. அதனையடுத்து 6.06 மணிக்கு மாவீரர்களை நினைவு கூர்ந்து ஒரு மணித்துளி அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனையடுத்து 6.07 மணிக்கு மாவீரர் துயிலுமில்லங்களில் முதன்மைச் சுடர்கள் ஏற்றப்பட்ட அதேவேளை, மாவீரரின் பெற்றோர், குடும்பத்தினர், உரித்துடையோர் மாவீரர்களின் கல்லறைகள், நினைவுக்கற்கள் முன்னிலையில் சுடரேற்றினர்.

இதேவேளையில், வீடுகள், பொது அலுவலகங்கள், விளையாட்டிடங்கள் என மக்கள் தத்தமது இடங்களில் ஈகச்சுடரேற்றினர். இவ் வேளையில் மாவீரர் பாடல் ஒலித்தது.

நேற்று முற்பகல் வேளை வன்னிப் பிரதேசத்திலும் யாழ். குடாநாட்டிலும் ஆரம்பித்த மழை இடை விடாது தொடர்ந்து கொட்டியவாறு இருந்தபோதும் மாவீரரின் உறவுகளும் போராளிகளும், பொதுமக்களும் ஆண், பெண் வயது வேறுபாடின்றி மாவீரர் துயிலுமில்லங்களுக்கு வருகை தந்திருந்தனர். மாவீரர் துயிலுமில்லங்களுக்குச் செல்லும் வீதிகள் அனைத்தும் பெரு மழையின் மத்தியிலும் மக்களால் நிரம்பியிருந்தது.

கொட்டிக் கொண்டிருந்த மழை துயிலுமில்ல நிகழ்வுகள் ஆரம்பமாகும் நேரத்தில் தணிந்து சென்று நிகழ்வுகள் ஆரம்பமாகியதும் முற்றாக இல்லாதிருந்தது. பின்னர் நிகழ்வுகள் முடிவுற்றதும் மீண்டும் மழை பொழியத் தொடங்கியது.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலுமில்லத்தில் மூத்ததளபதி கேணல் கருணா அவர்கள் பிரதான சுடரை ஏற்றிவைத்தார்.

மட்டக்களப்பு மாவடி முன்மாதிரி மாவீரர் துயிலுமில்லத்தில் பவானும் தாண்டியடி மாவீரர் துயிலுமில்லத்தில் மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யனும், வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி ராபேட்டும், அம்பாறை கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி லெப்.கேணல் ராமும்பிரதான சுடர்களை ஏற்றினர்.

திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் திருகோணமலை கட்டளைத் தளபதி (IVஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் நிறைவேற்றம்

அரசாங்கத்தின் 2004ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்ட இரண்டாம் வாசிப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது. வாசிப்புக்கு ஆதரவாக 126 வாக்குகளும், எதிராக 88 வாக்குகளும் அளிக்கப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்தது. ஈ.பி.டி.பி. வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. பொதுசன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் வாக்கெடுப்பில் எதிராக வாக்களித்தன. இந்த வாக்கெடுப்பிற்குப் பின்னர் சட்டப் பிரச்சினை ஒன்றை எழுப்பிய அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், சனாதிபதி பொறுப்பேற்றுள்ள மூன்று அமைச்சுக்களுக்கு எதிராக அவருடைய கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் வாக்களித்துள்ளன எனக் கூறினார். இதேவேளை, வரவு-செலவுத் (IVஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பல்கட்டும் நிலையம்

குறித்த தவணையில் சிறந்த முறையில் பல் கட்டுவதற்கும், பற்களுக்கு கிளிப் போடுவதற்கும் யாழ்.சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சியில் இயங்கிவருகிறது வேந்தன் பல்கட்டும் நிலையம் ஆனந்தபுரம், கிளிநொச்சி. (3890)

### விற்பனை

LOVE BIRDS குருவிகள் விற்பனையாகின்றது. இல82 D-8உருத்திரபுரம், கிளிநொச்சி. (3353)

### தவறிவிட்டது

கிளிநகரப் பகுதியில் NPGQ 9363இலக்கமுடைய உந்துருளிக்குரிய ஆவணங்கள், சாரதி அனுமதிப்பத்திரம், வேறு முக்கிய ஆவணங்கள் தவறிவிட்டன. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைக்கவும் மு.முருகையா இரணைமடு மரக்காலை155ம் கட்டை கிளிநொச்சி. (3364)

## தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் மாவீரர் தின சிறப்புச் செய்தி

தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு புதுக்குடியிருப்பு, வவுனியா வடக்குப் பகுதிகளின் மாவட்டச் செயலகங்களில் மரக்கன்றுகளை அன்பளிப்பாக விநியோகித்து வருகின்றது.இவ்விநியோகம் தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பாளர் திரு.க.சக்தி அவர்களின் நெறிப்படுத்தலுடன் நடைபெற்று வருகின்றது.

மேலும் இத் திட்டம் தொடர்பாக தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு மாவீரர் தின சிறப்புச் செய்தியாக தெரிவிப்பதாவது:-

மரங்களின் தேவை என்பது மக்களின் வாழ்வோடு மிகவும் நெருக்கமாக பின்னிப் பிணைந்துள்ளதனால் வனங்களின் அழிவு வீதம் அதிகரித்துள்ளது. அவற்றை ஈடுசெய்வது நுகர்வோர் அனைவரினதும் தேசியக் கடமையாகும் எனவேதான் மேற்குறித்த மரக்கன்றுகள் அன்பளிப்பாக விநியோகித்து வருகின்றது.இப்பாரிய பணியில் அனைத்து தமிழீழ மக்களும் இப்புனித நாளில் வீட்டுக்கொரு மரம் நடுகை செய்து நாட்டின் வளத்தைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு அறைகூவல் விடுகின்றோம்.இது தவிர மரக்கன்றுகள் பெற விரும்புவோர் மேற்குறித்த இடங்களிலும் இரணைமடுவில் அமைந்துள்ள நாற்று உற்பத்தி மையத்திலும் குறிப்பிட்ட தினத்தில் தொடர்பு கொண்டு மரக்கன்றுகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு-இரணைமடுவில் அமைந்துள்ள நாற்று உற்பத்தி மையத்தில் 26.11.2003.காலை 10மணிக்கு பன்னாட்டு மரங்களை விருத்தி செய்யும் பரீட்சார்த்த நடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் பல இன பன்னாட்டு மரங்கள் நடுகை செய்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இப்பிரிவின் பொறுப்பாளர்கள்,போராளிகள், பணியாளர்கள் மற்றும் சூழல் தொடர்பான ஆர்வலர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இது தொடர்பாக மேலும் தெரிவிப்பதாவது.

தமிழீழ வனவள பாதுகாப்புப் பிரிவு 1994ம் ஆண்டு தொடக்கம் இதுவரைகாலமும உள்ளூர மர இனங்களை நடுகை செய்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும் எதிர்வரும் காலங்களில் மிக விரைவாக மக்களுக்கு பயன் தரக்கூடிய பன்னாட்டு மரங்களை அறிமுகப்படுத்துவதே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவிக்கின்றனர்.

## வடக்கு கிழக்குப் பிரதேசம் தமிழர்களின் தாயகம் என்பதை ஏற்க முடியாது

**-பொ.ஐ.முன்னணியின் பா.உறுப்பினர் குணவர்த்தன**

(செட்டிகுளம்)

பதவியாவினை எந்த மாவட்டத்துடன் இணைப்பது என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

சிறீபுர ரஜமாவிகாரையில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் அனுராதபுர நாடாளுமன்ற உறுப்பினர் பேட்டி பிரேமலால் பதவியா பிரதேசமானது திருகோணமலை, அனுராதபுரம் ஆகிய இரண்டு மாவட்டங்களின் கீழ் இருப்பதாகவும் இதனால் நிர்வாகம் சிரமமாக இருப்பதாகவும் இதனால் அனுராதபுரம் மாவட்டத்துடன் இணைக்க தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசியிருப்பதாகவும் இதனைப் பிரதமர் வர்த்தமானி மூலம் அறிவித்து உள்ளதாகத் தெரிவித்தார்.

இதன்பின்னர் பேசிய திருகோணமலை மாவட்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் குணவர்த்தன இதனைக் கடுமையாக எதிர்ந்தார். அவ்வாறு இணைப்பதன்மூலம் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்காலத்தில் வர முடியாது என்றும் தெரிவித்தார்.

கிழக்கு மாவட்ட அபிவிருத்திக்கு உள்ள அமைச்சர்களால் சிங்களவர்களுக்கு எந்த விதமான பயனும் இல்லை என்று அவர் ரவூப்ஹக்கீமை கடுமையாக சாடிய அவர் பெரும்பான்மைக் கட்சிகள், சிறுபான்மைக் கட்சிகளிடம் தங்கியிருக்கும் நிலைமை மாறவேண்டும். இது சிங்கள மக்களின் நாடு, இதனை வேறு எவரும் உரிமை கொண்டாட முடியாது. வட-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

வடகிழக்கில் இதுவரை வேறு மதங்களைச் சேர்ந்த வரலாற்றுச் சின்னங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்பவில்லை. எல்லாம் பௌத்த மதச்சின்னங்களே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டின் ஒருபிடி மண்ணைக் கூட நாம் வேறு எவருக்கும் வழங்க மாட்டோம். சிங்கள மக்களுக்கு உலகில் வேறு நாடுகள் இல்லை. தமிழர்களுக்கு, முஸ்லிம்களுக்கு பல நாடுகள் உண்டு. இதனை உணர்ந்து அரசாங்கமும், சனாதிபதியும் செயற்பட வேண்டும்.

வட-கிழக்கில் இருக்கும் இந்து ஆலயங்கள், பௌத்த விகாரைகளை அழித்துக் கட்டப்பட்டவை. சிங்கள மன்னர்கள், தென்னிந்தியாவிலிருந்து அரச குமாரிகளைக் கவர்ந்து வந்து சிறை வைத்த இடங்களே இந்தக் கோயில்கள். இவற்றுக்குப் புனிதத் தலங்கள் என பெயரிடுவது அர்த்தமற்றது என்று கூறினார். (21)

---

இலங்கை அரசு

வட-கிழக்கு மாகாண சபை

வடக்கு கிழக்கு துரித மீளளிப்புத்திட்டம்

கடன் இல. 2880 சி.இ.

## தேசிய போட்டி கூறு விலை கோரல்

## பெரிய/சிறிய நிர்மாண வேலைகள்

# கேள்வி அறிவித்தல்

ஐ.எவ்.பி

*ஐ.எவ்.பி.இல.எம்யு/நீர்ப்/சிஎல்ஜி/01* *திகதி:-24.11.2003*

01. வடக்கு - கிழக்கு துரித மீளளிப்பு திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பில் இருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக் கடனின் ஒருபகுதியைப் பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதிவாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின்கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. கடன் வசதி, ஐ.டி.ஏ. நம்பிக்கையின் கீழான வசதி.
02. மாவட்டச் செயலாளர்,முல்லைத்தீவு, இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இதன் கீழ் உள்ள அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு கோரப்படுகின்றன.
03. மீளளிக்கப்படாத கட்டணமாக கீழ் வரும் அட்டவணையில் உள்ளவாறு காசாகவோ அல்லது மாற்றத்தக்கதான மாவட்டச் செயலாளர் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில்/ அஞ்சல் அலுவலகத்தில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ காசுக் கட்டளையாகவோ மாவட்ட செயலர் அலுவலகத்தில் சமர்ப்பித்த பின் முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களிடமிருந்து. 29.12.2003 ஆம் திகதி 15.00 மணிவரை கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்களில் இரு பிரதிகளை பெற்றுக் கொள்ளலாம்.
04. ஆர்வமுள்ள தகுதியான ஐ.சி.ரி.ஏ.டி. கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை முல்லைத்தீவு ஆணையாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிடுவதோடு, மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

    பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
    உள்ளூராட்சித் திணைக்களம்,
    முல்லைத்தீவு.

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வி, கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 45 நாள்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் மாவட்டச் செயலாளர், முல்லைத்தீவு அவர்களின் பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப் பிணைக்கான வங்கிஆணை\காசுக்கட்டளையையும் கேள்விகளுடன் இணைக்கப்பட்டு,பின்வரும் முகவரிக்கு 2003.12.29 ஆம் திகதி 15.00 மணிக்குமுன் கையளிக்க வேண்டும்.

    தலைவர்,
    கேள்விச்சபை,
    மாவட்டச் செயலகம்,
    முல்லைத்தீவு.

அதே தினம் பிற்பகல் 15.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் அலுவலகம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில்-அதேநேரத்தில்-கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06. ஏனைய விபரங்கள் கேள்வி ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல. | வேலைவிபரம் | கேள்விப் பிணை ரூ. | கேள்வி ஆவணங்களின் பெறுமதி ரூபா | வேலை நிறைவேற்றப் படவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 1. எம்யு/நீர்ப்/சிஎல்ஜி/01 | பிரா/உ.உ ஆணையாளர் அலுவலகக் கட்டடம் | 81000.00 | 800.00 | 06மாதங்கள் |
| 2. எம்யு/நீர்ப்/சிஎல்ஜி/ 02 | ஒலுமடு உப-அலுவலகம், புதுக்குடியிருப்புக் கட்டடம் | 38000.00 | 800.00 | 06மாதங்கள் |
| 3. எம்யு/நீர்ப்/சிஎல்ஜி/ 03 | புதுக்குடியிருப்புப் பிரதேசசபை கட்டடம் | 38000.00 | 800.00 | 06 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள், கேள்விக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 02 ஆம் பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருத் தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்விப் பத்திரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும் ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தக் காரருக்குத் தேவைப்படும் தகைமையை திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்

இமெல்டா சுகுமார்,
மாவட்டச் செயலாளர்,
முல்லைத்தீவு,
2003.11.24.


(சி-8925)

# மாவீரர்நாள் – 2003


விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில்


முல்லைக் கடற்பரப்பில்


முல்லைத்தீவில்







## புளியங்குளம், வவுனியா நகர்ப் பிரதேசத்தில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு

புளியங்குளம் பிரதேசத்தில் கடந்த 25ஆம் திகதி மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு காலை 11.30 மணிக்கு ஆரம்பமாகியது. கனகராயன் குளம் ம.வி.மாணவர்களின் பாண்ட் வாத்திய இசைமுழங்க பாடசாலைச் சந்தியிலிருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் அழைத்து வரப்பட்டனர். இந்நிகழ்வு வவுனியா வடக்கு அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனா தலைமையில ஆரம்பமானது. இதில் பொது ஈகச்சுடரினை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வன்னி மாவட்ட தலைவர் செந்தில்நாதன் அவர்களும் வவுனியா மாவட்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு தலைவர் அமிர் தலிங்கம் அவர்களும் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியினை லெப். எமிட்டன், வீரவேங்கை வெண்மதி, வீரவேங்கை எமில்டன் ஆகியோரின் பெற்றோர் ஏற்றினர். முதல் வித் தாகிய லெப் சங்கர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை 2ஆம் லெப் மதி, 2ஆம் லெப். கலைமதி, வீ.வே. கலைமாறன் ஆகியோரின் தாயார் ஏற்றிவைக்க மலர் மாலையினை வவுனியா மாவட்ட மாவீரர் போராளி குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் ஆனந்தன் அணிவித்தார். அனைத்து மாவீரர்களுக்கான ஈகச்சுடரினை வன்னிமாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஞானம் அவர்கள் ஏற்றிவைக்க மலர்மாலையினை தியாகதீபம் திலீபன் மருத்துவமனைப்பொறுப்பாளர் தில்லை அணிவித்தார். மலர் வணக்கத்தைத் தொடர்ந்து அக வணக்கம் இடம்பெற்றது. தொடர்ந்து தலைமை உரையை வவுனியா வடக்கு அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் ஆவர்த்தனா நிகழ்த் தினார். அதனைத் தொடர்ந்து சிறப்புரையினை வவுனியா மாவட்ட கல்வி அதிகாரி இந்திரராஜா அவர்களும் தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி அவர்களும் வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் அவர்களும் நிகழ்த் தினர். கனகராயன் குளம் ம.வி., சின்ன பூவரசங்குளம் விக்னேஸ்வர வித்தியாலயம், சின்னடம்பன் பாரதி வித்தியாலயம், மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் கவிதை நடனம், பாட்டு, நாடகம், பேச்சு ஆகிய கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. வவுனியா நகர்ப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அலை தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி ஏற்றிவைத்தார். மாவீரரின் பெற்றோர் ஒருவர் தமிழீழ தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார். மாவீரர்களின் பொதுத்திருவுருவப் படத்திற்கு வவுனியா மாவட்ட மாவீரர்-போராளிகள் குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் ஆனந்தன் மலர்மாலை அணிவித்தார். வரவேற்புரையினை வவுனியா நகர்ப்பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் குட்டி நிகழ்த் தினார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் நிகழ்த்தினர். (10)

## திலீபன் மருத்துவமனைக்கு பூநகரியில் அடிக்கல் நாட்டல்

பூநகரி தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் அதற்கென தம்பிராயில் ஒதுக்கப்பட்டுள்ள காணியில் நேற்று முன் தினம் காலை 10.30 மணிக்கு நாட்டப்பட்டது.

இது வெளிநாட்டு மருத்துவ அமைப்பொன்றின் உதவியுடன் கட்டப்பட விருக்கிறது. இந்நிகழ்வில் கேணல் விதுரா அவர்களும், தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவர்களும் தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவைப் பொறுப்பாளர் அவர்களும், பூநகரி நிலைய சிறப்பு மருத்துவ போராளியும் கிளி மாவட்ட அரசஅதிபர் அவர்களும், கிளிமாவட்ட சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அவர்களும் மற்றும் அரச நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், பெருந்திரளான மக்களும் இம்முக்கிய நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## ராணுவம் பனைதறிப்பதைத்தடுக்க காணி உரிமையாளர் முறையீடு

புன்னாலைக் கட்டுவன் பகுதியில் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயமாகத் தாம் பிரகடனப்படுத்தி வைத்துள்ள தனியார் காணிகளுள் இருந்து படையினர் பனைமரங்களைத் தறிப்பதாக அப்பகுதிக் காணிகளின் உரிமையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

படையினரின் சூரியகதிர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து இப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் படையினர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னும் அப்பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை மக்களிடமே மீள் ஒப்படைப்புச் செய்யாது இருந்து வரும் படையினர், தாம் ஆக்கிரமித்து வைத்திருக்கும் பகுதிகளில் உள்ள பனை மரங்களைத் தினமும் தறித்துத் தம் அரண் அமைத்து வருகின்றனர். இதன் மூலம் தமது வளங்கள் அழிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டிய மக்கள்,

இந்நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த உத்தரவிடுமாறு யாழ் அரச அதிபர் மற்றும் யாழ் மாவட்ட இராணுவத் தளபதி பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## 13 பேர் படுகொலை நினைவுநாள் ஒட்டுசுட்டானில் அனுஷ்டிப்பு

27.11.1990 ஆம் ஆண்டு ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலயத்தில் மாவீரர்களின் விஷேட பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை சிறிலங்கா விமானப்படையின் விமானம் குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தி பதின்மூன்று அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டனர். இதன் 13ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று ஒட்டு சுட்டானில் அனுஷ்டிக்கப்பட்டது.

## யாழ். மாணவர்களின் கல்விநிலை ராணுவக் கெடுபிடியால் பாதிப்பு

### வலிகாம வலயக் கல்விப்பணிமனையினர் கவலை

அரச புறக்கணிப்புக்களாலும் இராணுவக் கொடுபிடி நடவடிக்கைகளாலும் வலிகாம வலய மாணவர்களின் கல்விநிலை மோசமடைந்துள்ளதாக வலிகாம வலயக் கல்விப் பணிமனை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி கல்விவலயத்துக்கு உட்பட்ட 20 பாடசாலைகள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலய நடைமுறையால் முடக்கி வைக்கப்பட்டிருப்பதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னும் இப்பாடசாலைகள் விடுவிக்கப்படாததுடன் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துடன் இயங்கிவரும் பாடசாலைகளில் கற்கும் மாணவர்கள் மீதும் படையினர் கெடுபிடிகளைப் புரிவதால் மாணவர்களின் கல்விக்குரிய மனநிலை பாதிக்கப்படுகிறது.

இவற்றை விட பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியே போரினால் பாதிக்கப்பட்டு சேதமடைந்த பாடசாலைகளை கற்றலுக்குரிய அடிப்படை வசதிகளுடன் புனரமைப்பதற்கு பாடசாலைக்கல்வியமைச்சு தகுந்த நடவடிக்கை எடுக்காததால் அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## காஸாவில் மூன்றுபலஸ்தீனர் இஸ்ரேலியப் படையால் சுட்டுக்கொலை

(ஜெருசலேம்)

காஸாப் பகுதியில் 03 பலஸ்தீனர்களை இஸ்ரேலியப் படையினர் சுட்டுள்ளனர். மத்திய காஸாப் பகுதியில் இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. றமழான் பண்டிகைக்காகச் சென்று கொண்டிருந்த 03 பலஸ்தீன மக்களே இஸ்ரேலியர்களால் சுடப்பட்டு உயிரிழந்தவர்களாவர்.

# சனாதிபதியும்-அரசாங்கமும் இணக்கம் காணும் வாய்ப்பு

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

நாட்டில் அரசியல் நெருக்கடி நிலையைத் தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்களில் சனாதிபதியும், அரசாங்கமும் இணக்கங்களை காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நாடாளுமன்றில் நடத்திய மாநாட்டில் தெரிவித்தார். இரண்டு தரப்புகளும் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்லாத வகையில் பிரச்சினைக்குத் தீர்வைக் காண முயற்சிக்கின்றன. இதனை முன்னிட்டுப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் சமரவிக்கிரம-வித்த வல குழு விரைவில் தமது அறிக்கையை சனாதிபதியிடமும், பிரதமரிடமும் கையளிக்கவிருக்கிறது. இதன் அடிப்படையில் சனாதிபதியும் பிரதமரும் அரசியல் நெருக்கடி தொடர்பில் மூன்றாவது தடவையாக வும் சந்திக்கவிருப்பதாக அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டார். இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அடுத்த கட்ட சமாதானப் பேச்சுவார்த்தையில் சனாதிபதிக்கும், பிரதமருக்கும்
முக்கிய பங்கு அளிக்கப்படும் வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.(32)

# தேசியத் தலைவரின் பிறந்தநாளை முன்னிட்டு சம்பூரில் புதிய காவல்துறைக் கட்டடம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ தேசியத் தலைவரது 49ஆவது அகவை நிறைவு நாளை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பிரதேசத்தில் நிறுவப்பட்ட தமிழீழ காவல்துறை புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு திருகோணமலை மாவட்ட தமிழீழ காவல்துறைமேற்பார்வையாளர் தமிழரசன் தலைமையில் காலை 7.50 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்நிகழ்வில் பொதுச் சுடரினை கட்டை பறிச்சான் கிராம அலுவலர் சந்திர லிங்கம்ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை திருகோணமலை மாவட்ட நிர்வாகப் பொறுப்பாளர் உதயன் அவர்களும் தமிழீழ காவல்துறைக் கொடியினை காவல்துறை துணைப் பொறுப்பாளர் சி.மாதவன் அவர்களும் ஏற்றிவைத்தனர். காலை 8.06 மணிக்கு கட்டடத்தை திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி பதுமன் அவர்கள் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். அக வணக்கத்தின் பின் காவல துறை துணைப் பொறுப் பாளர் சி.மாதவன்அவர்களால் சிறப்புரையும் பணிமனை உபபொறுப்பாளர் மகாதேவன் அவர்களால் நன்றியுரையும் ஆற்றப்பட்டன. நிகழ்விற்கு துறைசார் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள்,பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர்கள், பொது மக்கள், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.(லோ)ள

# மூன்று பிரிவாக பயிற்சியில் ஈடுபட்டிருந்தவேளை இறுதிப் பிரிவிலுள்ளோரே மரணமடைந்தனர்

## இரு சிப்பாய்கள் வாக்கு மூலம்

நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படையினர் பலியான சம்பவம் தொடர்பாக வாக்கு மூலங்கள் சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று பெறப்பட்டது. சம்பவ வேளையில் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரு படைச் சிப்பாய்களது வாக்கு மூலங்கள் நீதவான் பா. சுப்பிரமணியம் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.

தொடர் இராணுவப் பயிற்சியில் அப்பகுதியில் மூன்று பிரிவுகள் ஈடுபட்டிருந்ததாகவும், இறுதி பயிற்சியாக நீரினூடாக கடந்து செல்லும் பயிற்சி இடம்பெற்றிருந்ததாகவும் அவர்கள் தமது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளனர்.

முதல் இரு பிரிவுகளும் குறித்த பகுதியைத் தாண்டி கடந்திருந்ததாகவும், தமது பிரிவு அருகாக குறித்த நீர்ப்பரப்பினூடாக கடக்க முற்பட்ட வேளையிலேயே இவ் விபத்து இடம்பெற்றதாகவும் அவ் வாக்கு மூலத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இறந்தவர்கள் கிளாலி முன்னரங்கப் பகுதியில் நிலை கொண்டுள்ள 1ஆம் விஜய பாகு படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பாரப்படுத்தி பிரேதப் பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்க நீதவான் பா. சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். (27)

# பரந்தன் முல்லை வீதியில் வாகனம் பாதையைவிட்டுவிலகி பள்ளத்தில் வீழ்ந்தது



(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் முல்லை வீதியில் பரந்தன் நோக்கி வந்து கொண்டிருந்த வாகனம் ஒன்று வீதியில் இருந்து விலகி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

நேற்று மாலை 7.30 மணிக்கு நடைபெற்ற இச்சம்பவத்தில் முரசுமோட்டைப் பகுதியில் வீதி வளைவில் உள்ள பாலம் ஒன்றில் வாகனத்தைத் திருப்பியபோது வாகனம் வீதியில் இருந்து விலகி பாலக்கட்டின் மீது ஏறி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது. இவ்வாறு வீழ்கின்றபோது பாலத்தின் அருகில் உள்ள பனை மரத்துடன் வாகனத்தின் முகப்புப் பகுதி மோதியதில் பலத்த சேதம் அடைந்துள்ளது. (லோ)

# பிரதமர்-சனாதிபதி இணைந்து அரசமைப்பின் முஸ்லிம் காங்கிரசிற்கு அதில் இடமிருக்கும்

## – அமைச்சர் ரவூப் ஹக்கீம்

சிறிலங்காவின் பிரதமரும், சனாதிபதியும் இணைந்து அரசாங்கம் ஒன்றை அமைத்தால் அதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு இடமிருக்கும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில், சனாதிபதி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றபோதும் குரங்குபாஞ்சான் முகாமை அகற்ற முயற்சிக்காமைக்குக் காரணம் சமாதானத்திற்கு அவர் ஆதரவு என்பதனாலேயே எனத் தெரிவித்த அவர், முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் பதவிக்குப் போட்டியிட விரும்புவதாகவும் அதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் எனவும் தெரிவித்தார். (32)

# 'விடுதலைப்புலிகள்' ஏடு இன்று வெளி வருகிறது

தமிழீழம் என்ற இறுதி மார்க்கத்திற்கு தள்ளிவிடும் புறநிலையை உருவாக்காதீர் எனும் தலைப்பில் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களின் மாவீரர் நாள் உரையை தாங்கி விடுதலைப்புலிகளின் அதிகார பூர்வ ஏடான 'விடுதலைப்புலிகள்' கார்த்திகை மாத ஏடு இன்று வெளிவருகின்றது.

இதில் சமாதானத்தை கழுமரத்திற்கு அழைக்கிறது கொழும்பு, சமாதானத்தின் எதிர்காலமும் சர்வதேசத்தின் கடமையும் எனும் தலைப்பிலான அரசியல் கட்டுரையும், சிங்கள தமிழ் கலைவிழா ஓர் பார்வை, தலைவரின் மாவீரர் நாள் உரையும் இன்றைய அரசியல் யதார்த்தமும் எனும் தலைப்பில் ஆசிரியர் தலையங்கம் மற்றும் பல்வேறு அம்சங்களையும் தாங்கி மேற்படி விடுதலைப்புலிகள் ஏடு இன்று வெளிவருகின்றது.

# சீன சபாநாயகர் இலங்கை விஜயம்

சீனாவின் சபாநாயகர் "ஜியேங் வின்குன்" நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளார். இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வந்துள்ள அவர், சனாதிபதி மற்றும் பிரதமரைச் சந்தித்து உரையாடியிருந்தார். (32)

# நடமாட்டம் குறைவு

குடாநாட்டில் நேற்றைய தினம் படையினரதுநடமாட்டம் மற்றும் ரோந்து நடவடிக்கைகள் குறிப்பிட்டுச்சொல்லும் அளவிற்கு இடம்பெற்றிருக்கவில்லை. பெரும்பாலும் படையினர் முகாம்களுக்குள் முடங்கியே இருந்தனர். (27)

# சுதந்திரக்கட்சியும் – ஜே.வி.பி.யும் இணக்கத்திற்கு வரப்போவதில்லை

## - அமைச்சர் ராஜித சேனாரட்ண

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணக்கம் ஒன்றுக்கு வரப்போவதில்லை என அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார். அவ்வாறு சனாதிபதி மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டிணைவை மேற்கொண்டால் அது அவருக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என அவர் தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்.

சனாதிபதி உள்துறை அமைச்சை பொறுப்பேற்றதன் காரணமாக குற்றச் செயல்கள் குறையவில்லை. சனாதிபதி அந்த அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் நாட்டில் 31 கொலை சம்பவங்களும், 52 பாலியல் வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன என்றார். (32)

# நீரைத்துனியார் மயமாக்கும் பிரேரணைக்கு எதிர்ப்பு

சிறிலங்கா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீரைத்தனியார் மயப்படுத்தும் பிரேரணையை எதிர்த்து இயற்கை வள உரிமை பாதுகாப்பு இயக்கம் எதிர்ப்பு தினத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி இவ் எதிர்ப்பு தினம் அனுஷ்டிக்கப்படும். அத்தினத்தில் கொழும்புக் கோட்டைபுகையிரத நிலையம் முன் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## தனிப்பரசு...

எம்மால் முடிந்தளவு நாம் முயற்சி செய்து வருகின்றோம் இதனை உலக நாடுகள் அனைத்தும் நன்கறியும் எனத் தெரிவித்துள்ள அவர், ஒடுக்கு முறையின் கொடுமைகளுக்கு ஆளாகி, இலட்சியத்தால் ஒன்றுபட்ட மக்களை எந்தவொரு சக்தியாலும் அசைத்துவிட முடியாது. இந்த உண்மையை இன்றைய புனித நாளில், தமிழீழத்திலும் உலகெங்கும் எமது தியாகிகளை நினைவு கூரும் இந்நன் நாளில், எமது இதயங்களிற் பதித்து, விடுதலை என்ற எமது சத்திய இலட்சியத்தில் நாம் உறுதி கொள்வோமாக என மேலும் தெரிவித்துள்ளார்.

(தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரை முழுமையாக வெள்ளி நாதத்தில் பிரசுரமாகியுள்ளது.)

## பாராளு...

திட்டத்தின் குழு நிலை விவாதம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பித்து 13 நாட்கள் (ஞாயிறு தினம் தவிர) 17ஆம் திகதி வரை நடாத்தவுள்ளது.

## கடலிலே...

நாட்டப்பட்டிருந்த சுடர்களும் பெற்றோர், உறவினர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் உட்பட பெருமளவிலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (லோ, 20)

## கொட்டும்...

கேணல் பதுமன் பிரதான சுடரை ஏற்றினார். வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி பிரதான சுடரை ஏற்றி வைத்தார்.

மன்னார் ஆட்காட்டி வெளி துயிலுமில்லத்தில் மேற்குக் கட்டளைத்தளபதி கேணல் ஜெயமும், பெரியபண்டிவிரிச்சான் துயிலுமில்லத்தில் நிதித்துறைப் பொறுப்பாளர் பாலதாசும், முழங்காவில் மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி லக்ஷ்மனும், விசுவமடு மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழக் காவல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன் அவர்களும், கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லத்தில் வடமுனைக் கட்டளைத்தளபதி கேணல் தீபனும் பிரதான சுடரினை ஏற்றினர்.

யாழ். கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் தமிழீழஅரசியல்துறைத் துணை ப்பொறுப்பாளர் சோ.தங்கனும், தீவகம் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் தீவகக்கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணனும், தென்மராட்சி மாவீரர் துயிலுமில்லத்தில் தளபதி வீமனும், வடமராட்சி எள்ளன் குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியனும், மணலாறு சிலோன் தியட்டர் முன்னரங்கப் பகுதிப்போராளிகளாலும் தமிழீழக் காவல்துறை சிறப்புப்படையினராலும் ஒழுங்கமைக்கப்பட்ட மாவீரர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழக் காவல்துறையின் சிறப்பு அணிப்பொறுப்பாளர் தமிழவனும் பிரதான சுடரினை ஏற்றினர்.

புதுக்குடியிருப்பு மாவீரர் நினைவு மண்டபத்தில் இம்ரான் பாண்டியன் படையணியின் சிறப்புத் தளபதி மணியரசன் பிரதான சுடரினை ஏற்றினர்.

சோதியாப் படையணியின் மாவீரர் நினைவு மண்டபத்தில் இப்படையணியிலிருந்து வீரகாவியமான 457 திருவுருவப்படத்திற்கான பிரதான சுடரினை சோதியா படையணியின் சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைத்தார்.

துணுக்காய் ஆலங்குளம் துயிலுமில்லத்தில் மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசாவும், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத் தளபதி கேணல் பானுவும் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் சோதியா படையணித் தளபதி மதுரமும் அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்தில் கடற்புலிகள் தளபதி ஜெரோமியும்,
மணலாற்றில் மாவீரர் கல்லறையுள்ள முக்கிய இடங்களில் தளபதி கேணல் சொர்ணம், தளபதி கேணல் பால்ராஜ், தளபதி கேணல் ஆதவன் ஆகியோரும் முதன்மைச் சுடரினை ஏற்றினர்.

மன்னார் நகர்ப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வில் அரசியல் துறையைச சேர்ந்த ஸ்ரீவன் ஏற்றினார். (10)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.